THE HON. SRI R. VENKATARAMAN : கூடியசீக்கிரம் நடைபெறும் என்று நினைக்கிறேன். அங்கே இருக்கக்கூடிய ஸ்லம் ட்வெல்லர்ஸ் எவ்வளவு தூரம் ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவுக்கு சீக்கிரம் முடியும். அவர்கள் ஒத்துழைக்கா விட்டால் எவ்வளவு ஐந்தாண்டு திட்டம் போட்டாலும் முடியாது. வெளியேற்றுகிறவர்கள் ஒத்துழைத்து வெளியேறினால் இந்த ஐந்தாண்டு திட்டத்திற்குள்ளாகவே முடிந்து விடலாம். இல்லாவிட்டால் எவ்வளவோ ஐந்தாண்டு திட்டங்கள் தேவைப்படலாம்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that slums exist even in bigger cities like New York and London, and if so, what is the method they adopt to clear those slums and why not we adopt such methods?

MR. SPEAKER : The hon. Member is asking a supplementary which relates to the previous question. This is with reference to a particular slum. Because I did not allow him a chance on the previous occasion, he cannot ask the question now. The question is disallowed.

SRI K. ANBAZHAGAN : ஜமைப்பச்சேரி பகுதியிலுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள வேண்டும் என்று கேட்டதற்கு அவர்களுக்கு வேறு இடத்தில் பாத்ரூம், ப்ளஷ் அவுட்டும்தான் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டும் என்று, அதாவது குடிசைகளையாவது கட்டிக் கொள்ள வேண்டும் என்று கேட்டால் அதற்கு உதவ அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை இப்பொழுது தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆல்டர்நேட் சைட்டாக வேறு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் அவர்களுக்கு என்று பாத்ரூம், ப்ளஷ் அவுட் எல்லாம் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த இடத்திற்கு உடனடியாகப் போனால் அந்த ஸ்கீம்மை அபிவிருத்தி செய்ய தயாராக இருக்கிறோம்.

Erode Industrial Estate

* 283 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஈரோட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் என்னென்ன தொழில் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அதில் எந்தெந்த பிரிவில் வேலை செய்யப்பட்டு வருகிறது?

(இ) எந்தெந்தப் பிரிவில் வேலை ஆரம்பமாகவில்லை? என்?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Plastic sheets, articles for the Railways, builders' hardware, agricultural implements, electric motors and cycle dynamos, milk products, etc., will be manufactured in the Industrial Colony at Erode.

10th September 1959]

(b) Two B-Type units manufacturing articles for Railways and plastic sheets have started production.

(c) The allottees of the other five units have not yet started production due to the delay in obtaining the machinery from the indigenous sources and the difficulties in importing machines from abroad.

SRI K. R. NALLASIVAM : அவர்களுக்கு மிஷின் கிடைக்காததால் உற்பத்தி செய்வது தடைப்பட்டிருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். அப்படிப்பட்ட மிஷின்கள் கிடைக்கும்படியான முயற்சியை ஏன் துரிதமாக சர்க்கார் எடுக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கே தனியார்தான் உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு சப்ளை செய்ய வேண்டுமானால் சர்க்கார் என்ன செய்ய முடியும். அவர்களுக்கு சப்ளை செய்யமுடியும் என்பது தெரியவில்லை.

SRI V. SUBBIAH : பல இடங்களுக்கு பல தொழில் பண்ணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் விருதுநகர் போன்ற இடங்களுக்கு அப்படிப்பட்ட தொழிலை ஏற்று நடத்துவதற்கு ஒருவரும் முன் வருவதாக இல்லை. அதற்குக் காரணம் என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. விருதுநகர் என்ற ஒரு இடத்திலேயே எல்லா இடங்களை விட தொழில் பண்ணைகள் அதிகமான ஆட்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் அந்த இடத்தில் இண்டஸ்ட்ரியல் பண்ணைகள் சுலபமாக வரவில்லை. அங்கு ஒன்று இல்லை. இன்றைக்கு ஏராளமாக சேவையாக இருக்கிறது. அங்கேயெல்லாம் வேலையும் நடந்துகொண்டு வருகிறது.

SRI K. R. NALLASIVAM : பொருள்களை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது கஷ்டமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் கஷ்டங்களை நீக்கி போதுமான இயந்திரங்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வார்களா ? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : அதில் இரண்டு விதமான கஷ்டம் இருக்கிறது. வெளிநாடுகளில் நாம் யெந்திரங்களை வாங்கியவுடன் அவர்கள் க்ளியரன்ஸ்-டெலிவரி ஆர்டர் கொடுத்தவுடன்தான் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இன்னொன்று நமக்கு இருக்கிற பாரின் எக்ஸ்சேஞ்ச் டிபிகல்டி. ஆகவே எவ்வளவு துரிதமாக யெந்திரங்களை வரவழைக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக வரவழைக்கப்படுகிறது.